**தலைப்பு 150 – பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

---

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக்கூற்று வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டில் 3.1.2 அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள வருமான குறியீட்டுக்கு ஏற்புடையதான வருமான கணக்கும், தலைப்பு 150 இன்கீழ் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் செயலாற்றுகை தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது மற்றும் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரது கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு, சமர்ப்பிக்கப்படும் கணக்கீட்டு மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு விடயவெல்லை

---

தலைப்பு 150- பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவினம், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆம் ஆண்டு யூலை 17 ஆந் திகதி அமைச்சின் செயலாளரிடம் வழங்கப்பட்டது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த

மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளது. போதியளவு மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகளை, இவ்வறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.14 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 127 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| நிதி ஒழுங்குவிதி 127 பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை | அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர் |
|---|---|---|---|
| நிதி ஒழுங்குவிதிகள் | | | |
| 127 (1)(அ) | சரியாகவும் நிதி சம்பந்தமான ஒழுங்கு நெறிப்படியும் நடைபெறுமாறு திணைக்கள நிதி சம்பந்தமான வேலைகளைத் திட்டமிட்டிருத்தல் (திணைக்களத்து நடவடிக்கைகள் நிதிக் கட்டளைகள் மற்றும் திணைக்களக் கட்டளைகளுக் கிணங்க மட்டும் நடைபெறுவதன்றி அரசாங்க அலுவல்களில் கொடுக்கல் வாங்கல்களில் எதிர்பார்க்கும் உயர்தர நேர்மையுடனும் நடைபெறுதல் வேண்டும்) | 1. செயற்றிட்டம் சரியாக தயாரிக்கப்படவில்லை | 2.3.2 |
| | | 2. செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை | 2.3.3.(அ) |
| | | 3. பெறுகை நடவடிக்கைகளை போதியளவில் திட்டமிடப்படாமை | 2.4.1 |
| | | 4. ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.11 |
| 127(1) (ஆ) | செலவினங்கள் மற்றும் அரசிறை சேகரிப்புகள் தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் ஒரு முறையை தயாரித்திருத்தல். | 1. முகாமைத்துவ குறைப்பாடுகள் | 2.7 |
| | | 2. ஏற்புடையாமை | 2.12 |
| | | 3. மனித வள முகாமைத்துவத்தில் குறைப்பாடுகள் | 2.13 |

| | | | |
|---|---|---|---|
| 127(2) | தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள திணைக்களங்களில் நடப்புச் செலவினங்களும் புதிய அல்லது அதிகரித்த செலவுகளுக்குரிய உத்தேசங்களும் அவற்றின் சிக்கனமும் திறமையும் சம்பந்தமாக குறித்த அமைச்சில் நுண்ணித்தாக ஆராயப்படுகின்றன. | 1. கருத்திட்டங்களை நிறைவேற்றுவதன் தாமதங்கள் | 2.3.3(ஆ) |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் யாவும், அவர் தனக்கே உரியதான நிருவாக அனுபவத்தையும் பகுத்தாய்வு அறிவினையும்கொண்டு அவற்றில் பிரயோகிப்பதற்கென அவருக்கு விடப்படும் முறையினை ஏற்பாடு செய்திருத்தல். | 1. வாகன உபயோகத்தில் குறைப்பாடுகள் | 2.5(அ) |
| | | 2. வெளித் தரப்புகளிடம் வழங்கியுள்ள சொத்துக்கள் | 2.5(உ) |
| | | 3. ஏனைய நிறுவனங்களுக்குரிய சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தல் | 2.5(ஊ) |
| | | 4. வருடாந்த பொருட் மீளாய்வுகளை மேற்கொள்வதன் குறைப்பாடுகள் | |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் பொறுப்பேற்றிருக்கும் அரசிறை அல்லது பிற அரசாங்க வருமானங்களைச் சேகரித்தல் அமைச்சினால் மிக நுனித்தாய் கவனிக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றன | 1. வருமானக் கணக்குகளில் குறைப்பாடுகள் | 2.9(அ) |
| | | 2. அரசாங்க அலுவலர்களுக்கு முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைப்பாடுகள் | 2.10 |

| | | | |
|---|---|---|---|
| 127(7) | உத்தியோகத்தர்களது/ பணியாளர்களது தாமதம், கவனையீனம், தவறு மற்றும் மோசடி காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 103 தொடக்கம் 108 வரையிலான ஒழுங்குவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிக் கோவையை கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் கடைபிடிக்கப்பட்டு நிதி ஒழங்குவிதிகள் 156(1) இன் பிரகாரம் அத்தகைய இழப்புகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்.்.பணியாளர்கள் மீது மிகை விதிப்பு விதிப்பதற்கும், பொறுப்பு கூறுவதற்கு எற்பாடுகள் அளிக்கப்பட்டிருப்பின் தம்மிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளிலிருந்து கணக்கீட்டு அலுவலர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அரசாங்க கணக்குக் குழுவுக்கு முன் தோன்றி தான் பொறுப்பாகவுள்ள திணைக்களக் கணக்குகளை தனது கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து விளக்கமளித்து, அவை முறையானவை எனவும் எடுத்துரைத்து அக்குழுவிற்கு உதவி செய்தலும் அவருடைய கடமையாகும். | 1.பொருளாதாரமற்ற கொடுக்கல்வாங்கல் | 2.6 |
| | | 2 பணம் தொடர்பாக பணியாற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புகளை பெற்றுக்கொள்ளாமை | 2.14 |

## 2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 2.1 அமைச்சின் பிரதான கடமைப் பொறுப்புகள்

(அ) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலிய இருப்பு களஞ்சிய முனையக் கம்பெனி (CPSTL) பெற்றோலிய வள அபிவிருத்தி பணியகம் மற்றும் வரையறுக்கப்பட்ட பொலிப்டோ லங்கா தனியார் கம்பெனி போன்ற நியதிச்சட்ட நிறுவனங்களினதும் அரச கூட்டுத்தாபனங்களினதும் விடயங்களுக்கு ஏற்புடையதான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் தயாரிப்பு, பின்னாய்வு மற்றும் மதிப்பிடல் மேற்கொள்ளுதல்

(ஆ) பெற்றோலியம் சார்ந்த உற்பத்திகள் மற்றும் இயற்கை காஸ் இறக்குமதி செய்தல், சுத்திகரிப்பு, களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் சந்தைப்படுத்தல்

(இ) பெற்றோலியம் உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு தொடர்பான நடவடிக்கைகள்

(ஈ) பெற்றோலியம் ஆய்வு மற்றும் அதனைச் சார்ந்த நடவடிக்கைகள்

(உ) பெற்றோலிய உற்பத்தி வளமூலங்களிலிருந்து காஸ் உற்பத்தி மற்றும் விநியோகித்தல்

( ஊ) எரிபொருள் வழங்குதல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றுக்கு ஏற்புடையதான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

(எ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலிய இருப்பு களஞ்சிய முனையக் கம்பெனி (CPSTL) பெற்றோலிய வள அபிவிருத்தி பணியகம், வரையறுக்கப்பட்ட பொலிப்டோ லங்கா தனியார் கம்பெனி போன்ற நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய எல்லா விடயங்களுக்கும் ஏற்புடையதான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

(ஏ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலிய இருப்பு களஞ்சிய முனையக் கம்பெனி (CPSTL) பெற்றோலிய வள அபிவிருத்தி பணியகம், வரையறுக்கப்பட்ட பொலிப்டோ லங்கா தனியார் கம்பெனி என்பவற்றை மேற்பார்வை செய்தல்.

## 2.2 அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களும் அவற்றின்மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைப் பொறுப்புகளும்

-------------------------------------------------------------------------

அமைச்சின்கீழ் தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்களும் அவற்றின் கடமைப் பொறுப்புகளும் பின்வருமாறாகும்.

| | **அமைச்சின்கீழ் உள்ள நிறுவனங்கள்** | **தாபிக்கும் அதிகாரம்** | **கடமைப் பொறுப்புகள்** |
|---|---|---|---|
| (i) | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 1961 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனச் சட்டம் | • பெற்றோலியம் சுத்திகரிப்பு.<br>• உயர் தரத்திலான பெற்றோலிய உற்பத்திகளை சந்தைப்படுத்தல்.<br>• வினைத்திறனுடன்கூடிய விநியோகிப்பவர்களின் வலையமைப்பு மூலமாக நுகர்வோரின் தேவைகளை அதிகூடிய மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு பணியாற்றுதல்.<br>• உயர் நெறிமுறைகளுக்கு அமைவாக சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் ஆகிய துறைகளின்மீது பாரிய கவனம் செலுத்தப்பட்டு வியாபார பங்காளர்களுடன் குறிக்கோள்களை எய்துக்கொள்ளுதல் |
| (ii) | இலங்கை பெற்றோலிய | 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டம் | • மசகு எண்ணெய் சுத்திகரிப்பு. |

| | | | |
|---|---|---|---|
| | இருப்பு களஞ்சிய முனையக் கம்பெனி (CPSTL) | | • சுத்திகரிப்பு செய்யப்பட்ட பெற்றோலிய வளங்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல். |
| (iii) | பெற்றோலிய வள அபிவிருத்தி செயலகம் | 2003 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க பெற்றோலிய வளச் சட்டம் | • உள்நாட்டு பெற்றோலிய வளங்களின் ஆய்வு நடவடிக்கைகள், அகழ்வுகள் மற்றும் பெற்றுக்கொள்ளுதல்.<br>• தேசிய வலுசக்தி பாதுகாப்பிற்கு பங்களிப்பு வழங்குதல். |
| (iv) | பொலிப்டோ லங்கா தனியார் கம்பெனி | 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டம் | • அகற்றப்படும் ப்ளாஸ்றிக், எரிபொருளாகவோ சுற்றாடல் நேயத்துடனான ஏனைய பெற்றோலிய வளங்கள் சார்ந்த உற்பத்திகளாகவோ பரிவர்த்தனை செய்யும், இலங்கையின் புதிய கண்டுபிடிப்புகளை எளிய முறையிலும், பாதுகாப்பாகவும், இலாபகரமானதாகவும் வர்த்தகமயப்படுத்துவதன்மூலம் முனைப்பாக சூழலை பாதுகாப்பதற்கு பங்களிப்பு வழங்குதல்.<br>அதன்மூலம் பெற்றோலியம் இறக்குமதி செய்வதற்கு செலவாகும் அந்நியச் செலாவணியை குறைத்துக்கொள்ளுதல்<br>• இதற்காக பொருத்தமான ஏனைய புதிய கண்டுபிடிப்புகளை மேம்படுத்தல் |

## 2.3 செயலாற்றுகை

--------------------

### 2.3.1 அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணி

-------------------------------------------

எரிபொருள் வழங்குதலின் தரத்துடனான தன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பன மேம்படுத்தல் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் ஒரு நோக்கமாக இருந்தது. இதற்காக ஏற்புடைய கொள்கையுடனான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரித்தல், பின்னாய்வுகளை மேற்கொள்ளுதல், மதிப்பிடல் அமைச்சின் பணியாக இருந்தது. 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி நடைபெற்ற பொது தொழில்முயற்சி தொடர்பான செயற்குழுவில் எரிபொருள் நிரப்புமிடங்களின் பௌதீக பரிசோதனை மேற்கொள்ளும்படி அமைச்சிடம் பணிக்கப்பட்டிருந்தது. இலங்கையில் தற்போது நிலவும் எரிபொருள் நிரப்புமிடங்கள் 1,461 இல் 1,254 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உரியதாவதுடன், அதில் 35 எரிபொருள் நிரப்புமிடங்களில் அதாவது

நூற்றுக்கு 2.8 எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டில் பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய 207 நிரப்புமிடங்கள் இலங்கை இந்தீய எண்ணெய் கம்பெனிக்கு உரியதாவதுடன், அந்த நிரப்புமிடங்களில் எரிபொருள் சந்தைப்படுத்தல் சேவை தொடர்பான மேற்பார்வை அமைச்சினால் மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் மேற்கொள்ளப்படவில்லை.

**2.3.2 திட்டமிடல்**

-----------------

2014 ஆம் ஆண்டு பெப்ருவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி கூற்றறிக்கை பிரகாரம், 2017 ஆம் ஆண்டுக்காக செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான 08 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 24 செயற்பாடுகள் குறித்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆயினும் தயாரிக்கப்பட்டிருந்த செயற்றிட்டத்தில் பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக இற்றைப்படுத்திய நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பணியாற்றொகுதி, மற்றும் தற்போதுள்ள பணியாற்றொகுதி தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருமான தலைப்பு பொருட்டு வருமானம் சேகரிக்கும் செயற்றிட்டம் தாயரிக்கப்படவில்லை.

(இ) வருடாந்த செயற்பாட்டுக்கான கட்டுநிதி தேவைகளின் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3** கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை

----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை**

-----------------------------------------------------------------------------------

வருடாந்த செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பின்வரும் கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்படவில்லை.

**(i) 2002 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1961 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க பெற்றோலிய கூட்டுத்தாபனச் சட்டம் திருத்தப்படல்**

---------------------------------------------------------------------------------

2004 ஆம் ஆண்டு தொடக்கம் பெற்றோலிய கைத்தொழில் தொடர்பாக ஒழுங்குபடுத்தல் அதிகார சபை இல்லாமை காரணமாக பெற்றோலியக் கைத்தொழிலை, 2002 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க இலங்கைப் பொது பயன்பாட்டு ஆணைக்குழு சட்டத்தின்கீழ் ஒழுங்குபடுத்தவதற்கு உட்படுத்தியதுடன், கைத்தொழில்களுக்குள் உள்ளடக்குவதற்காக 2006 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்தது. அதனடிப்படையில் கைத்தொழில் ஒழுங்குபடுத்தலுக்கு தேவையான கருவிகளை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் வழங்குவதற்கு 2002 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1961 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டம் ஆகிய இரண்டு சட்டங்களையும் திருத்தம் செய்வதற்கு ஏற்புடையதான அடிப்படை நடவடிக்கைகள் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், அந்த சட்ட திருத்தங்கள் 2018 ஆம் ஆண்டு யூன் 30 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்படவில்லை.

**(ii) தேசிய வாயு கொள்கை தயாரித்தல்**

-----------------------------------------------------

2015 ஆம் ஆண்டு செப்தெம்பர் 21 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிமூலம் இயற்கை காஸ் தொடர்பாக தேசிய கொள்கையினை தயாரிப்பதற்கு பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சிடம் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு இறுதியில் தயாரித்து முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த இந்த தேசிய வாயு கொள்கை 2018 ஆம் ஆண்டு யூன் 20 ஆந் திகதியிலும் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கருத்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

--------------------------------------------------------------------

பின்வரும் கருத்திட்டங்களை நிறைவேற்றும்போது தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

**(i) திருகோணமலை எண்ணெய் தாங்கி தொகுதியின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு**

---------------------------------------------------------------------------------------------

புவியியல் அமைப்புபடி அகில உலகத்தினதும் கவனம் செலத்தப்பட்டுள்ள உலகத்தின் இரண்டாவது ஆழமான துறைமுகமான திருகோணமலை துறைமுகத்தில் 1930 ஆம் ஆண்டு தொடக்கம் தாபிக்கப்பட்டுள்ள எண்ணெய் தாங்கி முறைமை 12,500 கன மீற்றர் கொள்ளளவினை கொண்டுள்ளதுடன், அது 102 எண்ணெய் தாங்கிகளையும் ஏனைய துறைசார் வசதிகளையும் கொண்டமைந்துள்ளது. தற்போதுள்ள 99 எண்ணெய் தாங்கிகளின் எண்ணிக்கையில் கீழ் பகுதியில் 14 எண்ணெய் தாங்கிகள் இந்திய எண்ணெய் கம்பெனிகளால் பயன்படுத்தப்படுகின்றது. கைவிடப்பட்டுள்ள மேற்பகுதியில் உள்ள 84 எண்ணெய் தாங்கிகளை நவீனமயப்படுத்தலுக்காக அடிப்படை தீர்மானம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 29 அந் திகதியில் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், இதுவரை இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படாமையால் இந்த தாங்கிகளின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

**(ii) எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் விஸ்தரித்தல்**

---------------------------------------------------------------------------------------------

1969 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட தற்கால எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் விஸ்தரித்தல் தொடர்பாக 2015 ஆம் அண்டில் மார்ச் 15 ஆந் திகதி தொடக்கம் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை துணைக்குழு கூட்டங்களில் பலமுறை விரிவாக கலந்துரையாடப்பட்டிருந்தது. உத்தேச கருத்திட்டத்தின் நிதிசார் சாத்தியவள ஆய்வு மேற்கொள்வதற்காக புலமை சான்றோர்களின் குழு நியமனம் செய்யப்பட்டிருப்பினும், 2018 ஆம் ஆண்டு யூன் 30 அந் திகதி வரையிலும் அது தொடர்பான முன்னேற்றம் எய்துக்கொள்ளப்படவில்லை.

**(iii) பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் எண்ணெய் வழங்கும் குழாய் முறைமையினை நவினமயப்படுத்தல் மற்றும் விஸ்தரித்தல்**

-------------------------------------------------------------------------------

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் எண்ணெய் வழங்கும் குழாய் முறைமையினை நவீனமயப்படுத்தல் மற்றும் விஸ்தரித்தல்

தொடர்பான கருத்திட்டத்தில் ஆக்கக்கூறுகளாக மேலதிக களஞ்சிய வசதிகளை ஏற்படுத்தல், தற்போதுள்ள எண்ணெய் வழங்கும் குழாய் முறையை நவீனமயப்படுத்தல் மற்றும் விஸ்தரித்தல் அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. கருத்திட்டத்தில் பொறியியலாளர்களின் மதிப்பீடு 61 மில்லியன் அமெரிக்கன் டொலர்களாகும். 2015 ஆம் ஆண்டு திசெம்பர் 09 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் பொறியியலாளர்களின் பெறுகை நடவடிக்கை பிராகரம் சர்வதேச விலை கேள்விகள் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 07 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆரம்பிப்பதற்கு உரியதாக இருந்த இக் கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதியிலும் ஆரம்பிக்கப்படவில்லை.

**(iv) புதிய எரிபொருள் களஞ்சயமொன்றை வட மாகாணத்தில் தாபித்தல்**

---------------------------------------------------------------

காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனத்திற்குரிய நிலப் பகுதியில் தாபிக்க்பபட்டுள்ள எண்ணெய் களஞ்சியத்தை, அவ்விடத்திலிருந்து அகற்றிக்கொள்ளுமாறு 2011 ஆம் ஆண்டில் சீமெந்து கூட்டுத்தாபனத்தால் இலங்கை பெற்றோலிய இருப்புக் களஞ்சிய முனையக் கம்பெனியிடம் அறிவிக்கப்பட்டிருந்தது. புதிய இருப்பு களஞ்சியம் தாபிப்பதற்காக பொருத்தமான காணி பெற்றுக்கொள்வதற்கு முடியாமை காரணமாக தற்போதுள்ள எண்ணெய் இருப்புக் களஞ்சியத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் விஸ்தரித்தல் என்பவற்றை மேற்கொண்டு பேணிச் செல்வதற்காக 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் 19 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம்மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் இலங்கை பெற்றோலிய இருப்புக் களஞ்சிய முனையக் கம்பெனியால், சீமெந்து கூட்டுத்தாபனத்திடம் செலுத்தப்பட வேண்டிய 105.00 மில்லியன் ரூபாவிலான நிலுவை வாடகை செலுத்தப்படாமை காணரமாக இந்தக் கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 அந் திகதியிலும் நிறைவேற்றுவதற்கு இயலாதிருந்தது.

**(v) மசகு எண்ணெய் கலக்கும் கைத்தொழிற்சாலை தாபிக்கும் கருத்திட்டம்**

---------------------------------------------------------------------------------

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இந்த நாட்டில் முத்துராஜவெல பிரதேசத்தில் மசகு எண்ணெய் தயாரிக்கும் கைத்தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு மலேசியாவின் ஹயிரெக்ஸ் ஒயில் எஸ்.டி.என்.பி.எச்.டி கம்பெனியுடன் இணைந்து 2016 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி 03 உடன்படிக்கைகளை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும் மேற்படி உடன்படிக்கைகளில் நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய் தொழிலில் பாதகமான தாக்கங்கள் ஏற்படக் கூடிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதெனவும், அமைச்சரவை தீர்மானம் நேரடியாக மீறப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதனடிப்படையில் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் எரிபொருள் கலக்கும் கைத்தொழிற்சாலைக்கு தேவையான எண்ணெய் வகைகளை இறக்குமதி செய்தல், கலக்குதல் மற்றும் மீள்ஏற்றுமதி செய்தல் ஆகிய நடவடிக்கைகளின் பொருட்டு 20 ஆண்டுக் காலத்திற்கான அனுமதிப்பத்திரம் ஹயிரெக்ஸ் ஒயில் கம்பெனியிடம் கையளிக்கப்படவில்லை.

மேலும் மேற்படி உடன்படிக்கைகளில் ஒதுக்கீடுகளை திருத்தம் செய்வதற்கு கூட்டுத்தாபனம் கருதுவதாயின், அந்த உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையினை பின்பற்றப்பட வேண்டுமென 2018 ஆம் அண்டு சனவரி 23 ஆந் திகதிய கடிதம்மூலம் சட்டமா அதிபரால்

அறிவிக்கப்பட்டிருந்தது. ஆகையால் உடன்படிக்கைகளில் ஏதேனும் பிரிவினை திருத்தம் செய்வதற்கு தேவையெனில் அதனை இரு தரப்புகளின் பரஸ்பர இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ளுதல் வேண்டும். ஆயினும் அமைச்சினால் அவ்வாறு பணியாற்றப்படாமையால் 2018 ஆம் அண்டு யூன் மாதம் 30 ஆந் திகதியிலும் இக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகம்**

**---------------------------------------------------------**

**(i) கிழக்கு கரையோரத்தில் மேற்கொள்கின்ற இணைந்த அய்வு நிகழ்ச்சித்திட்டம் (JS5 மற்றும் JS6 நிலப் பகுதிகள்) - Joint Study in the Eastern Coast (JS5 and JS6 Blocks)**

**--------------------------------------------------------------------------------**

இலங்கையில் கிழக்கு கரையோரத்தில் அதிக ஆழத்துடன் கூடிய JS5 மற்றும் JS6 நிலப் பகுதிகளில் ஆய்வு நடவடிக்கைகளின் பொருட்டு 2016 ஆம் ஆண்டு பெப்ருவரி 18 ஆந் திகதி இலங்கை அரசாங்கம் மற்றும் டொடால் ஈ அண்ட் பீ பெட்ரோலியர்ஸ் எண்ணெய் கம்பெனிகளுக்கிடையில் இணைந்த ஆய்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. இதன்போது ஈஸ்டர்ன் ஈகோ டி.எம்.சீ.சீ. (Eastern Eco DMCC) கம்பெனி, டோடால் கம்பெனியின் பல்வகை சேவை நிபந்தனைகளின்கீழ் தரவுகளை சேர்க்கப்படும் பங்குதாரராவதுடன், டொடால் (TOTAL) கம்பெனியின் பொருட்டு இணைந்த ஆய்வு பிரதேசம் உள்ளடங்கும் வகையில் இரட்டை பரிமாண நிலநடுக்க தரவுகளை திரட்டும் பணியில் பங்களிப்பு வழங்குகின்றது. ஆயினும் இலங்கை அரசாங்கம், ஈஸ்டர்ன் ஈகோ டி.எம்.சீ.சீ கம்பெனியுடன் பல்வகை சேவைகளின் உடன்படிக்கை மேற்கொள்வதில் தாமதம் காணரமாக 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 அந் திகதி வரை இக் கருத்திட்டம் ஆரம்பிப்பதற்கு இயலாதிருந்தது.

இந்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்துவதன் நோக்கம் யாதெனில், தரவுகளின் வரைவிலக்கணம் மற்றும் வெளிப்படுத்துவதன்மூலம் கிடைக்கப்பெறும் பெறுபேறுகளைக் கொண்டு பெற்றோலிய வளங்களின் ஆய்வு மற்றும் தயாரிப்பு என்பவற்றுக்கு உடன்படிக்கை மேற்கொள்ளுதலாகும். தற்போது கருத்திட்டம் ஆரம்பிப்பதற்கு முடியாது போனமையால் தரவுகளுடன் கூடிய சாட்சிகள் இல்லாமல் பெற்றோலிய ஆய்வுகளின் பொருட்டு முதலீட்டாளர்களை மனம்கவரச் செய்வதற்கு இயலாதிருந்தது.

**(ii) கடல்சார் சூழல் தரவுகளை சேர்க்கும் ஆய்வு கருத்திட்டம் (Marine Environmental Baseline Study)**

**--------------------------------------------------------------------------------**

பெற்றோலிய எண்ணெய் ஆய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அடிப்படை சுற்றாடல் பரிசோதனை மேற்கொள்ளுதல் அத்தியவசியமாவதுடன், இவ்வாறான பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு கவனிக்கத்தக்க அளவில் காலமெடுப்பதால் பெற்றோலிய எண்ணெய் ஆய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்படுகின்றது. ஆகையால் கருத்திட்டங்களின் செலவு 37.16 மில்லியன் ரூபா ஆவதுடன், கடல்சார் சூழல் தரவுகளை சேர்க்கும் ஆய்வு கருத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி

முகவர் நிறுவனம் மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகம் என்பவற்றுக்கிடையில் 2015 ஆம் ஆண்டு 30 அந் திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 28 ஆந் திகதி வரை இதற்காக ரூபா. 29,082,077 தொகை பெற்றோலிய வள அபிவிருத்தி செயலகத்தால் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்திடம் செலுத்தியிருந்தது.

கடல்சார் சூழல் தரவுகளை சேர்க்கும் கருத்திட்டத்தின்ஊடாக எதிர்பார்க்கப்படுவது யாதெனில், இலங்கையில் பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் இதுவரை திரட்டியுள்ள தரவுகளை ஒரு முறைமையில் உள்ளடக்குதலாகும். கடல்சார் சூழல் தரவுகளை ஒன்று திரட்டும் ஆய்வு அறிக்கை தயாரித்தல் மற்றும் தரவு முறைமை (Database) தயாரித்தல் இக் கருத்திட்டத்தில் முடிவுறுத்தப்பட வேண்டிய கடமைகளாகும். உடன்படிக்கை மேற்கொண்டு 08 மாதங்களுக்குள் அதாவது 2016 ஆம் அண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆந் திகதியில் இந்த பணிகளை முடிவுறுத்தி கையளிக்கப்படுதல் வேண்டும். ஆயினும் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதியிலும் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் ஏற்புடைய இடைக்கால அறிக்கைகளை சமர்ப்பித்திருப்பினும் இறுதி அறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் உடன்படிக்கை பிரகாரம் அலுவல்களை நிறைவேற்றும் பணிகள் தாமதமடையும்போது, அது தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

.

## 2.4. பெறுகை நடைமுறைமூலம் வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல்

---------------------------------------------------------------------------------------------------------

அமைச்சினால் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல்படி நடவடிக்கைகளை மேற்கொண்டு வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு 12.44 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருந்ததுடன், அதில் 12.14 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.4.1 பெறுகைகளை திட்டமிடல்

-------------------------------

அமைச்சிடம் தொழில்பாட்டு நடவடிக்கைகளின்கீழ் மீளாய்விற்கான ஆண்டில் பெறுகை நடைமுறைமூலம் வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக 11.625 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் 9.00 மில்லியன் ரூபா மட்டும் உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடு தொடர்பில் தயாரிக்கப்பட வேண்டிய பெறுகை திட்டம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

**பெறுகை திட்டமிடல் மற்றும் பூர்வாங்க கட்டம்**

------------------------------------------------------------------

(அ) அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவை – 2006 இல் 4(2) வழிகாட்டல் பிரகாரம் ஆகக்குறைந்தது 03 ஆண்டு காலத்திற்காக எதிர் பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் தொடர்பில் பெறுகை திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். ஆயினும், 12.7 மில்லியன் ரூபா பெறுமதியான 04 விடயங்களின் பொருட்டு பெறுகை திட்டம் 2017 ஆம் ஆண்டுக்கு மட்டும் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவை 4(2)(3) வழிகாட்டல் பிரகாரம் பெறுகை திட்டம் எப்போதும் இற்றைப்படுத்தல் பெறுகை நிறுவனத்தின் பொறுப்பாகும். ஆயினும் அதற்கு ஒழுங்கமையாது பணியாற்றப்பட்டிருந்தது.

(i) 2017 ஆம் ஆண்டில் ரூபா.503,696 ஐ செலவிடப்பட்டிருப்பினும், பெறுகை திட்டம் அதற்கமைவாக இற்றைப்படுத்தியிருக்கவில்லை.

(ii) பெறுகை திட்டத்தில் மதிப்பிடப்பட்ட அளவு மற்றும் பெறுமதி குறிப்பிடப்பட்டு பின்வருமாறு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| **வகை** | **பெறுகை திட்டத்தில் மதிப்பிடப்பட்ட அளவு** | **உண்மையாக கொள்வனவு செய்யப்பட்ட அளவு** | **பெறுகை திட்டத்தில் மதிப்பிடப்பட்ட செலவு** | **உண்மை யான செலவு** |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா. |
| ரூபவாகினி 32'/40' அச்சீட்டு இயந்திரங்கள் | 2 | 3 | 80,000 | 269,970 |
| வர்ணம் | 4 | 06 | 100,000 | 173,400 |
| கருப்பு வெள்ளை | 4 | 10 | 100,000 | 109,000 |

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

அமைச்சில் சொத:தக்கள் தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் குறைப்பாடுகள் வெளிப்படுத்திக்கொள்ளப்பட்டது.

### (அ) வாகன உபயோகம்

அமைச்சிடம் மீளாய்விற்கான ஆண்டு முடிவில் பின்வருமாறு 33 வாகனங்கள் இருந்ததுடன், அந்த வாகனங்கள் 541,277 கிலோமீற்றர் ஓடியிருந்தன. அதற்காக எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் பொருட்டு ரூபா 1,269,175 ம், வாகனங்களின் சர்விஸ் பொருட்டு ரூபா. 2,416,388.95 ம், வாகனங்களின் பழுதுபார்த்தல் பொருட்டு ரூபா. 8,311,679.99 மற்றும் வாகன காப்பீட்டிற்காக ரூபா 2,615,688.12 ம் என்ற வகையில் மொத்தமாக ரூபா. 14,612,932.06 செலவிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் அமைச்சினால் வாகனங்களின் ஓட்டத்திற்காக சாரதி சம்பளம் மற்றும் படிகள் தவிர்ந்த ஒரு கிலோ மீற்றர் பொருட்டு ரூபா 27 செலவிடப்பட்டிருந்தது.

**அமைச்சர் அவர்கள், பிரதி அமைச்சர் அவர்கள், மற்றும் அவர்களின் பணிற்றொகுதியால் வாகனங்களை பயன்படுத்தல்.**

2017 ஆம் ஆண்டில் அமைச்சில் நிகழ்ந்துள்ள 31 வாகன விபத்துகளில் 18 விபத்துக்கள் அல்லது நூற்றுக்கு 58 கௌரவ பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அவர்களின் பதவியணியினரிடம் இணைக்கப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பில் ஏற்பட்டுள்ள விபத்துகள் என்று அவதானிக்கப்பட்டது.

### (ஆ) நிதி மற்றம் தொழில்பாட்டு குத்தகை முறையின்கீழ் வாகனங்களின் உபயோகம்

அமைச்சினால் குத்தகை தொழில்பாட்டு முறையின்கீழ் வாகனங்கள் எதுவும் பெற்றுக்கொள்ளவில்லையென்பதுடன், நிதி குத்தகை முறையின்கீழ் திறைசேரியால் 09 வாகனங்களை பெற்றுக்கொண்டு அமைச்சிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த வாகனங்களின் பொருட்டு எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் ரூபா. 229,900 ம், பழுதுபார்த்தல் ரூபா. 951,273.22 ம், சர்விஸ் ரூபா. 715,797.59 ம், வாகனங்களின் காப்புறுதி ரூபா. 583,535.98 என்ற வகையில் (குத்தகை தவணை, சாரதி சம்பளம்

மற்றும் படிகள் தவிர்ந்த) மொத்தம் ரூபா 2,480,506.79 செலவிடப்பட்டிருந்தது. குத்தகை முறையின்கீழ் பெற்றுக்கொண்டிருந்த வாகனங்கள் 197,108 கிலோ மீற்றர் ஓடியிருந்தன. அதனடிப்படையில் அந்த வாகனங்களில் ஒரு கிலோமீற்றர் ஓடுவதற்கு குத்தகை தவணை, சாரதி சம்பளம், மற்றும் படிகள் தவிர்ந்த ரூபா. 12.58 செலவிடப்பட்டிருந்தது.

**(இ) அலுவலகங்களை பேணும் செலவு**

அமைச்சிற்குரியதாக எதுவித கட்டிடமும் இல்லையென்பதுடன், வருடாந்தம் 22.03 மில்லியன் ரூபாவிலான வாடகையின்மீது பெற்றுக்கொள்ளப்பட்ட 03 கட்டிடங்களில் அலுவலகம் பேணிச் செல்லப்படுகிறது. வருடாந்தம் துப்பரவு செய்யும் கட்டணம் 2.76 மில்லியன் ரூபாவாகும். அதனடிப்படையில் மொத்த கட்டிடங்களின் பொருட்டு செலவு ரூபா. 24,794,919 ஆக இருந்தது. அதற்கமைவாக தனிநபர் அலுவலகம் பேணிச் செல்லும் செலவு ரூபா. 330,599 ஆக இருந்தது.

**(ஈ) வருடாந்த பொருட் மீளாய்வுகளை நடாத்தல்**

2017 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக பொருட் மீளாய்வு சபை அறிக்கைகள் 2018 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 23 நாட்கள் தாமதமடைந்த பின்னர் 2018 ஆம் ஆண்டு ஏப்பிரல் 23 ஆந் திகதி கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த சுற்றுநிருபத்தில் 3.1.5 பந்தி பிராகரம் அழிக்கப்பட வேண்டிய மற்றும் ஏனைய அரச நிறுவனங்களிடம் கையளிக்கப்பட வேண்டிய பொருட்கள் தொடர்பில் 2017 ஆம் அண்டு பெப்ருவரி 26 அந் திகதி அல்லது அதற்கு முன்னர் நடவடிக்கைகளை மேற்கொண்டு முடிவுறுத்தப்பட வேண்டுமாயினும், 2018 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதியிலும் அதனை நிறைவேற்றப்படவில்லை.

**(இ) வெளியக தரப்புகளிடம் கையளிக்கப்பட்டிருந்த சொத்துக்கள்**

அமைச்சிற்குரிய 5.80 மில்லயின் ரூபா பெறுமதியான மோட்டார் வண்டி 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆந் திகதி தொடக்கம் இது வரை இலங்கை பெற்றோலிய இருப்புக் களஞ்சிய முனையக் கம்பெனியிடம் (CPSTL) முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) ஏனைய நிறுவனங்களுக்குரிய சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தல்**

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய இருப்புக் களஞ்சிய முனையக் கம்பெனியின் (CPSTL) பெறுமதி ஒழுங்கு முறையாக 17.90 மில்லியன் ரூபாவும், 7.84 மில்லியன் ரூபாவும் என்ற வகையில் 02 மோட்டார் வண்டிகளை 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் 09 ஆந் திகதி மற்றும் 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆந் திகதி தொடக்கம் இது வரை அமைச்சினால் பயன்படுத்தியிருந்த சந்தர்ப்பங்கள் மாதிரி பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

**2.6 பொருளாதாரமற்ற கொடுக்கல்வாங்கல்**

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தின் அலுவலர்களால் நிதி ஒழுங்குவிதி 156(7) மற்றும் 780 இற்கு ஒழுங்கமையாது பணியாற்றியதால் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றுக்கு வரவு வைக்கப்பட வேண்டிய உதவு தொகை உரியவாறு வரவு வைக்கப்படாமை காணரமாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உதவு தொகையாக 2.27 மில்லியன் ரூபாவும், ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மிகை கட்டணமாக 0.43 மில்லியன் ரூபாவும் என்ற வகையில் 2.70 மில்லியன்

ரூபா மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது.

## 2.7 முகாமைத்துவ குறைப்பாடுகள்

--------------------------------------

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன..

**(அ) நிலையான அபிவிருத்தி இலக்குகளை அண்மித்துக்கொள்ளுதல்**

(i) நிலையான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 “ நிகழ்ச்சி நிரல்” பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக அமைச்சினால் தமது விடயவெல்லைக்குள் வருகினற அலுவல்கள் தொடர்பாக நிலையான அபிவிருத்தி இலக்குகள், அந்த இலக்குகளை அண்மித்துக்கொள்ள வேண்டிய திருப்புமுனைகளையும், இலக்குகள் அண்மித்துக்கொள்வதை அளவிடுவதற்கு சுட்டிகளையும் அடையாளம் காணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ii) நிலையான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அமைச்சின் கடமைப்பொறுப்புகள் பற்றி அக்கரையுள்ள தரப்புகளாக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனவியல் அமைச்சு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலிய இருப்பு களஞ்சிய முனையக் கம்பெனி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகம் ஆகிய தரப்புகளை அடையாளம் காணப்படலாம். ஆயினும் அமைச்சுக்கு ஏற்புடையதான இலக்குகளை தயாரிக்கும்போது பங்களிப்பு அணுகுமுறை வெளிப்படாமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(iii) ஏதேனும் பணியில் சரியான செயலாற்றுகையை அளவிடுவதற்கு சரியான தரவு முறைமை இருத்தல் அத்தியாவசியமானாலும், நிறுவனத்தால் நிலைபேறுடனான இலக்குகளை அண்மித்துக்கொள்வதனை அளவிடுவதற்காக சரியான தரவு முறைமை உருவாக்கி கொள்ளாமை அவதானிக்கப்பட்டது. மேலும், இதற்காக நிதி ஒதுக்கீடுகள் மற்றும் பௌதீக வளங்கள் பயன்படுத்திக்கொள்ளும் முறைமை அடையாளம் காணப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

(iv) அமைச்சினால் தமக்கு நேரடியாக ஏற்புடையதாகும் நிலைபேறுடனான அபிவிருத்தி நோக்கங்களாக “ செலவிட முடியுமான தூய்மையான வலுசக்தியை” (தெரிய ஹெக்கி பிவிதுரு பலசக்தி) அடையாளம் காணப்பட்டிருப்பினும், அதனை நிறைவேற்றும் வகையில் 2017 ஆம் ஆண்டுக்கு எதுவித கருத்திட்டமும் தயாரிக்கப்படவில்லை.

(v) நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதிய 2/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவு சுற்றறிக்கையில் 6.1 பந்தியின்கீழ் தற்போது நடைமுறைப்படும் கருத்திட்டங்கள்ஊடாக வறுமை இல்லாதொழிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் “எரிபொருள் விலை குறைத்தல் மற்றும் மண்ணெண்ணை நிவாரணம் வழங்குதல்” என்ற நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தியபோதிலும், அன்றைய திகதியின் பின்னர் தொடங்கும் காலப்பகுதியில் எரிபொருள் விலை கணக்குகள் அதிகரிக்கப்பட்டிருந்தது.

**2.8 கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தல்**

---

2017 ஆம் ஆண்டு 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலப் பகுதிக்குள் அமைச்சிடம் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகள், உபயோகம் மற்றும் மீதி தொடர்பான தகவல்கள் மற்றும் அது தொடர்பாக கணக்காய்வின் அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

| **ஆண்டு** | **செலவின வகை** | **தேறிய ஒதுக்கீடு** | **பயன்பாடு** | **மீதி** | **மீதி தேறிய ஒதுக்கீட்டில் சதவீதமாக** |
|---|---|---|---|---|---|
| 2013 | மீண்டுவரும் | 115.00 | 110.71 | 4.29 | 3.73 |
| | மூலதனம் | 17.00 | 12.94 | 4.06 | 23.88 |
| | **மொத்தம்** | **132.00** | **123.65** | **8.35** | **6.33** |
| 2014 | மீண்டுவரும் | 133.50 | 132.18 | 1.32 | 0.99 |
| | மூலதனம் | 34.05 | 30.33 | 3.72 | 10.93 |
| | **மொத்தம்** | **167.55** | **162.51** | **5.04** | **3.01** |
| 2015 | மீண்டுவரும் | 4,653.98 | 4,652.78 | 1.20 | 0.03 |
| | மூலதனம் | 190.00 | 91.03 | 98.97 | 52.09 |
| | **மொத்தம்** | **4,843.98** | **4,743.81** | **100.18** | **2.07** |
| 2016 | மீண்டுவரும் | 214.67 | 213.50 | 1.18 | 0.54 |
| | மூலதனம் | 228.10 | 192.26 | 35.84 | 15.71 |
| | **மொத்தம்** | **442.77** | **405.76** | **37.01** | **8.36** |
| 2017 | மீண்டுவரும் | 236.99 | 230.22 | 6.77 | 2.86 |
| | மூலதனம் | 93.62 | 80.10 | 13.52 | 14.45 |
| | **மொத்தம்** | **330.61** | **310.32** | **20.29** | **6.14** |

**2.9 மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம்**

---

அமைச்சினால் 2017 ஆம் ஆண்டுக்காக வருமானக் குறியீடு ஒன்றின் பொருட்டு மொத்தம் 95.16 மில்லியன் ரூபா வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் மொத்தம் 120.10 மில்லியன் ரூபா வருமானம் திரட்டப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் நூற்றுக்கு 126.21 ஆக இருந்தது.

**(அ) 20.03.02.21 ஆம் இலக்க வருமானக் குறியீடு - பெற்றோலிய வளங்கள் அபவிருத்தி அமைச்சிற்கு ஏற்புடையதான கட்டணங்கள்**

---

பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) திருத்தம் செய்யப்பட்ட வருமான மதிப்பீடுகளின்படி வருமானம் திரட்டுதல் 95.16 மில்லியன் ரூபா ஆவதுடன், மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 120.10 மில்லியன் ரூபாவிலான வருமானம் திரட்டப்பட்டிருந்தது. அதனடிப்படையில் திருத்தம் செய்யப்பட்ட மதிப்பீடு 24.94 மில்லியன் ரூபா அல்லது நூற்றுக்கு 26 ஐ கடந்து வருமானம் சேர்க்கப்பட்டிருந்தது.

(ii) கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானக் கணக்குபடி 9.81 மில்லியன் ரூபா வருமானக் கணக்கில் நிலுவையாக இருந்ததுடன், அந்த

நிலுவை வருமானத்தில் 0.81 மில்லியன் ரூபா 01 ஆண்டு தொடக்கம் 02 ஆண்டுகள் வரையிலான காலவெல்லைக்கு நிலுவையாக இருந்தது. 9.00 மில்லியன் ரூபா 2017 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய நிலுவை வருமானமாக காணப்பட்டது.

(iii) அமைச்சின் 2017 ஆம் ஆண்டுக்கான திருத்தம் செய்யப்பட்ட மதிப்பீடு மற்றும் தேறிய வருமானம் திரட்டுதல் 24.94 மில்லியன் ரூபாவை விஞ்சுவதற்காக தார் (tar) பொருட்களை இறக்குமதி செய்வதற்கு புதிய வருடாந்த அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு புதிய வியாபரிகளை பதிவு செய்தல், மசகு பொருட்களை இறக்குமதி செய்யும் வருடாந்த அனுமதிப் பத்திரக் கட்டணங்களை திருத்தம் செய்தல் மற்றும் நிலுவை வருமானம் கிடைக்கப்பெறுதல் காரணங்களாக காட்டப்பட்டிருந்தது. ஆயினும், அதனுள் உள்ள 15.00 மில்லியன் ரூபாவிலான மசகு பொருட்கள் இறக்குமதி செய்வதற்காக அனுமதிப் பத்திரமுள்ள 06 நிறுவனங்களால் எதிர்வரும் 2018 ஆம் அரையாண்டுக்காக 2017 ஆம் அண்டில் செலுத்தப்பட்ட அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் என அவதானிக்கப்பட்டது.

## 2.10 அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்கு ஏற்புடையதான விடய இலக்கம் 15001 இன்கீழ் அரசாங்கத்தின் அலுவலர்களுக்கு முற்பணக் கணக்கு பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உண்மையான பெறுமதிகள் பின்வருமாறாகும்.

| **செலவு** | | **கிடைக்கப்பெறுதல்** | | **பற்றுமீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக்கூடிய எல்லை** | **உண்மை யான** | **ஆகக் குறைந்த எல்லை** | **உண்மையான** | **ஆகக்கூடிய எல்லை** | **உண்மையான** |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன |
| 6.00 | 5.97 | 2.3 | 2.71 | 13.00 | 11.87 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### நிலுவை கடன் மீதி அறவிடப்படாமை

2012 ஆம் ஆண்டில் சேவை விட்டுச் சென்ற சாரதியிடமிருந்து அறிவிடப்பட வேண்டிய ரூபா.74,634 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சினால் பல்வேறு நடவடிக்கைகள் மெற்கொண்டிருந்த போதிலும், மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் அந்தக் கடன் தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

## 2.11 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் பின்வரும் ஆவணங்கள் பேணப்படவில்லையென்பதுடன், சில ஆவணங்களை முறையாகவும் இற்றைப்படுத்தியும் பேணப்படவில்லையென்பது மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| ஆவண வகை | சம்ப்நதப்பட்ட ஒழுங்குவிதி | அவதானிப்புகள் |
|---|---|---|
| பிணை ஆவணம் | நிதி ஒழுங்குவிதி 891(1) | பேணப்படவில்லை |
| சேதங்கள் தொடர்பான ஆவணம் | நிதி ஒழுங்குவிதி 110 | முறையாக பேணப்படவில்லை |
| வாகனங்களின் லொக் புத்தகம் | நிதி ஒழுங்குவிதி 1645 (அ) | இற்றைப்படுத்தியிருக்கவில்லை |
| கடன் மற்றும் முற்பணப் பதிவேடு | 2017 ஆம் ஆண்டு யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையில் 05 ஆம் பந்தி | முறையாக பேணப்படவில்லை |
| லீவு தொடர்பான பதிவேடு | தாபன விதிக்கோவையில் XII அத்தியாயத்தின் 1.7 | முறையாக பேணப்படவில்லை |
| ஓட்டக் குறிப்பு புத்தகங்கள் | நிதி ஒழுங்குவிதி 1645 | முறையாக பேணப்படவில்லை |
| வாகனங்கள் தொடர்பான குறிப்புகள் | 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 29 அந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிருவாக சுற்றறிக்கையில் 3.3 பந்தி | பேணப்படவில்லை. |

## 2.12 ஏற்புடயாமை

**சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஏற்புடையாமை**

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளில் ஏற்புடயாமைக்கான சந்தர்ப்பங்கள் பின்வருமாறு குறிப்பிடலாம்.

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கான தொடர்- | | ஏற்புடயாமை |
|---|---|---|
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை** | |
| | (i) நிதி ஒழுங்குவிதி 103 (1) (ஆ) | அமைச்சின் 19 வாகன விபத்தகள் தொடர்பாக பொலிசிசடம் அறிக்கையிடப்படாமை |
| | (ii) நிதி ஒழுங்குவிதி 103(1)(எ) | சேதங்கள் மீண்டும் மீண்டும் ஏற்படுவதனை தவிர்ப்பதற்காக போதியளவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், வாகனங்கள் தொடர்பில் உள்ளக கட்டுப்பாட்டு முறையின் குறைப்பாடுகள் காரணமாக விபத்துகளின் எண்ணிக்கையில் விரைவான வளர்சியினை காட்டுவதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு 11 விபத்துகள் |

| | | |
|---|---|---|
| | | நிகழ்ந்திருந்ததுடன், அது 2017 ஆம் ஆண்டு 31 வரை அதிகரித்திருந்தது. இதனடிப்படையில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வாகன விபத்துகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 182 ஆல் அதிகரித்திருந்தது. |
| | (iii) நிதி ஒழுங்குவிதி 101(1) மற்றும் 105(4) | நட்டங்கள் சேதங்கள் தொடர்பான பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ள அலுவலர்களிடத்தில் நட்டத்தை அறவிடுதல் மற்றும் அதற்கு மேலதிகமாக அந்த அலுவலர்களுக்கு எதிராக உரிய அதிகாரிகள் தேவையான சந்தர்ப்பத்தில் தாபன விதிக்கோவையின்கீழ் வெவ்வேறாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வெண்டும். அமைச்சில் வாகன விபத்துகளுக்கிடையில் 15 வாகன விபத்துகள் சாரதிகளின் கவனயீனம் காரணமாக நிகழ்ந்துள்ள விபத்துகளாவதுடன், அந்த சாரதிகள் தொடர்பில் மேற்படி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| | (iv) நிதி ஒழுங்குவிதி 101(3) | சேதங்கள் தொடர்பான முழு அறிக்கை 07 நாட்களுக்கு தாமதமேற்படுமாயின் தொடக்க அறிக்கை உடனடியாக கணக்காய்வாளர் அதிபதியிடம் அனுப்பி வைக்கப்பட வேண்டுமாயினும், அமைச்சின் வாகன விபத்துகள் தொடர்பாக தொடக்க அறிக்கைகள் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு 02 வாரங்களும் 08 மாதங்களும் தாமதப்படுத்தியிருந்ததாக அவதானிக்கப்பட்டது. |
| | (v) நிதி ஒழுங்குவிதி 104(4) | விபத்து தொடர்பான விசாரணையின் பின்னர் நட்டம் ஏற்பட்ட திகதி தொடக்கம் மூன்று மாதங்களுக்கள் முழு அறிக்கை கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும் அமைச்சில் வாகன விபத்து தொடர்பான முழு அறிக்கை கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு 03-07 மாதங்களுக்கிடையிலான காலம் எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| | (vi) நிதி ஒழுங்குவிதி 155 | நிதிஒழுங்குவிதி ஏற்பாடுகளுக்கு முரணாக வெளியிடப்பட்ட கணக்காய்வு உசாவுதல்களுக்கான பதில்கள் 34 நாட்கள் தொடக்கம் 45 நாட்கள் வரை கால தாமதத்தின் பின்னர் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | **அரசாங்க நிருவாக சுற்றறிக்கை** | |
| | (i) 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாக | அரசாங்க வாகனங்களில் அரச இலட்சினை இருத்தல் வேண்டுமாயினும், அமைச்சின் 13 வாகனங்களில் அரச இலட்சினை |

| | | |
|---|---|---|
| | சுற்றறிக்கை | பதிக்கப்படவில்லை. |
| (ii) | 2002 பெப்ருவரி 25 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | அரச வாகனங்களின் பொருட்டு உரிய நிறுவனத்தின் பெயர் பதிக்கப்படுதல் வேண்டுமாயினும், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்குரிய 13 வாகனங்களில் அமைச்சின் பெயர் குறிப்பிடப்படவில்லை. |

**2.13 மனித வளங்களின் முகாமைத்துவம்**

**2.13.1 இணைக்கப்பட்ட பதவியணி, உண்மையான பதவியணி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகளுக்கான செலவு**

மேற்படி 2.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட, உண்யைமான மற்றும் மிகை பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும். மீளாய்விற்கான ஆண்டில் அமைச்சினால் ஆளுக்குரிய வேதனாதிகளின் பொருட்டு 68.21 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் தனி நபர் செலவு ரூபா 909,517.84 ஆக இருந்தது.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உண்மையான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 16 | 13 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 51 | 39 | 12 |
| (iv) | ஆரம்ப நிலை மட்டம் | 27 | 21 | 06 |
| | மொத்தம் | 97 | 75 | 22 |

இது தொடரப்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன..

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஆட்சேர்ப்புச் செய்யப்படாமை**

இயல்பான சேவை மட்டத்தினை பேணிச் செல்வதற்கும் பதவியணி தொடர்பான காலத்திற்கேற்றவாறான மீளாய்வினை மேற்கொள்வதற்கு இயலாமையும் காணரமாக மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் சிரேட்ட பதவிநிலை வெற்றிடங்கள் 3 ம், மூன்றாம் நிலை மட்டத்தில் வெற்றிடங்கள் 1 ம், இரண்டாவது மட்டத்தில் வெற்றிடங்கள் 12 ம், ஆரம்ப மட்டத்தில் 06 வெற்றிடங்களும் என்ற வகையில் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

**2.14 அரசாங்க அலுவலர்களின் பிணை வைத்தல்**

நிதி ஒழுங்குவிதி 880 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சில் பிணை வைக்கப்பட வேண்டிய அலுவலர்களின் பிணை வைப்புகள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.